**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP. 2 /2022**

**Deposition of P.W.1 - பிரிட்டோ**

**Dated:** 14.03.2025

3**வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவ சாலை நேரான சாலை என்றால் சரிதான். இருவழி தடம் கொண்ட சாலை என்றால் சரிதான். விபத்திற்குட்பட்ட இருவாகனங்களும் இருசக்கர வாகனங்கள் என்றால் சரிதான். ,ரு வாகனங்களும் எதிர் எதிர் திசையிலிருந்து வந்து நேருக்கு நேர் மோதி கொண்டது என்றால் சரிதான். TN 75 AQ 0306 என்ற வாகனத்தை யார் ஓட்டினார் என்றால் நான் தான் ஓட்டி வந்தேன். முதல் விசாரணையில் நான் ஓட்டியதாக குறிப்பிடப்படவில்லை. சம்பவத்தின் போது நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. விபத்தின் போது எனக்கு செல்லத்தக்க ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் பழகுனர் உரிமம் இருந்தது. கடைக்கு பொருட்கள் வாங்குவதற்காக வந்தேன். வாகனத்தின் பின்னால் அபினோ இருந்தார். அபினோவிற்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. பழகுனர் உரிமம் என்பது வாகனத்தை ஓட்டி பழகுவதற்காக மட்டுமே வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற வாகனத்தில் எல் போர்டு ஒட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் தான் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று விபத்தை எற்படுத்தினேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தை மெதுவாகவும், கவனமாகவும் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் பொறுப்பல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள்

முழுவதும் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயங்களினால் எனக்கு நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வலது கை பாதிக்கப்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு படிப்பில் தேர்ச்சி பெறவில்லை என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயம் பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தேன். தொடர்ந்து தேர்ச்சி பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு வருடம் படிப்பு தடைப்பட்டதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பொறியியல் கல்லூரியில் தடை என்பது நடைமுறையில் இல்லை என்றால் சரியல்ல. அதிக நாட்கள் கல்லூரிக்கு செல்ல இயலவில்லை என்றால் பரிட்சை தான் எழுத முடியாது என்றும், அடுத்த ஆண்டு படிப்பிற்கு செல்ல தடை இல்லை என்றால் சரியல்ல. எனக்கு கல்வியில் பாதிப்பு இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு முன்பு போல் எனக்கு எல்லா வேலைகளும் செய்ய முடியும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6, 7 அதிக இழப்பீடு பெறுவதற்காக மிகைப்படுத்தி தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6ல் குறிப்பிட்டுள்ளபடி எனக்கு செலவுத்தொகை ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகனம் எனது தாயார் பெயரில் உள்ளது. எனது தாயாரையும், அதன் காப்பிடு நிறுவனத்தையும் வழக்கில் தரப்பினராக கட்சி சேர்க்கவில்லை என்றும், எனது மனு குறைபாடு கொண்டது என்றால் சரியல்ல. எனக்கு வருவாய் ஈட்டும் திறனில் இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் அதிக இழப்பீடு மற்றும் வட்டி கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் இழப்பீடு கோரமுடியாது என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.